36. கீழ்க்காணும் எவ்வேகத்தில் ஓடினால் உசைன் போல்ட் அவர்களை வெற்றி கொள்ள இயலாது?

(1) 10.1 மீ / வி (2) 10.5 மீ / வி (3) 10.6 மீ / வி (4) 10.7 மீ வி

37. A மணிக்கு 60 கி.மீ வேகத்தில் செல்கிறார்.

B, 70 கிமீ தொலைவை 1 மணி நேரத்தில் கடக்கிறார்.

C, 1 கிமீ தொலைவைக் கடக்க எடுத்துக்கொள்ளும் காலம் 60 வி.

D, 120 கிமீ தொலைவைக் கடக்க எடுத்துக்கொள்ளும் காலம் 3 மணி.

எனில் சம வேகத்தில் பயணம் செய்பவர்கள் யாவர்?

(1) A, B, C (2) A, C, D (3) A, C (4) C, D

38. கடல் மற்றும் வான்வழி போக்குவரத்துகளில் தொலைவினை அளக்கப் பயன்படும் அலகு எது?

(1) நாட் (2) நாட்டிகல் மைல் (3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

39. கப்பல் மற்றும் விமானங்களின் வேகங்களை அளக்கப் பயன்படும் அலகு எது?

(1) நாட் (2) நாட்டிகல் மைல் (3) இரண்டும் சரி (4) இரண்டும் தவறு

40. ஒரு நாட் என்பது ஒரு மணி நேரத்தில் ஒரு நாட்டிக்கல் மைல் தொலைவினைக் கடக்கத் தேவைப்படும் _______. ஆகும்.

(1) வேகம் (2) காலம் (3) திசைவேகம் (4) முடுக்கம்

41. ஒரு நாட்டிகல் மைல் என்பது _______ கிமீ ஆகும்.

(1) 100 (2) 1.852 (3) 1000 (4) 2.852

42. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?

(1) கடல் மற்றும் வான்வழி போக்குவரத்துகளில் தொலைவினை அளக்க நாட் எனும் அலகு பயன்படுத்தப்படுகிறது.

(2) ஒரு நாட்டிகல் மைல் என்பது 1.852 கிமீ ஆகும்.

(3) கப்பல் மற்றும் விமானங்களின் வேகங்களை அளக்க நாட் எனும் அலகு பயன்படுத்தப்படுகிறது.

(4) ஒரு நாட் என்பது ஒரு மணி நேரத்தில் ஒரு நாட்டிக்கல் மைல் கடக்கத் தேவைப்படும் வேகம் ஆகும்.

43. ஒரு பொருளானது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கடந்து வந்த பாதையின் மொத்த நீளம் _______ எனப்படும்.

(1) வேகம் (2) இடப்பெயர்ச்சி (3) தொலைவு (4) முடுக்கம்

LIVEWORKSHEETS


44. இயக்கத்திலுள்ள ஒரு பொருளின் ஆரம்ப மற்றும் இறுதி நிலைகளுக்கிடையே உள்ள குறைந்தபட்ச நேர்கோட்டுத் தொலைவு _______ எனப்படும்.

(1) வேகம் (2) இடப்பெயர்ச்சி (3) தொலைவு (4) முடுக்கம்

45. இயக்கத்திலுள்ள ஓர் பொருளானது மீண்டும் தனது தொடக்க நிலையை அடைந்தால் அதன் _______ சுழியாகும்.


(1) வேகம் (2) இடப்பெயர்ச்சி (3) தொலைவு (4) முடுக்கம்

46. ஒருவர் பாதை 1 ன் வழியாக A லிருந்து B ஐ அடைந்து பின் பாதை 3 ன் வழியாக A ஐ அடைந்தார் எனில் அவர் கடந்த தொலைவு _______ கிமீ ஆகும்.





(1) 0 (2) 10 (3) 15 (4) 17

47. ஒருவர் பாதை 1 ன் வழியாக A லிருந்து B ஐ அடைந்து பின் பாதை 3 ன் வழியாக A ஐ அடைந்தார் எனில் அவரின் இடப்பெயர்ச்சி _______ கிமீ ஆகும்.




(1) 0 (2) 10 (3) 15 (4) 17


48. ஒருவர் பாதை 1 ன் வழியாக A லிருந்து B க்கு மணிக்கு 2 கிமீ என்ற சராசரி வேகத்தில் சென்றால் அவர் B ஐ அடைய ஆகும் காலம் _______ மணி நேரம் ஆகும்.




(1) 5 (2) 20 (3) 15 (4) 17


LIVEWORKSHEETS

49. ஒருவர் A லிருந்து B க்கு பாதை 1 ன் வழியாக 5 நிமிடத்தில் சென்றால் அவரது வேகம் _______ கிமீ / நி ஆகும்.





(1) 10 (2) 2 (3) 5 (4) 1

50. ஒருவர் A லிருந்து B க்கு பாதை 1 ன் வழியாக 5 நிமிடத்தில் சென்றால் அவரது திசைவேகம் _______ கிமீ / நி ஆகும்.




(1) 10 (2) 2 (3) 5 (4) 1

51. படத்தைப் பார்த்து சரியானதை தேர்வு செய்க.




(i) A லிருந்து B க்கு செல்ல பாதை 1 மற்றும் 2 ஐக்காட்டிலும் பாதை 3 குறைந்த தொலைவுடையதாகும்.

(ii) A,B என்ற இரு புள்ளிகளுக்கு இடையே இடப்பெயர்ச்சி 22 கிமீ ஆகும்


(iii) A லிருந்து B க்கு செல்ல தெற்கு நோக்கி நடக்க வேண்டும்.

(iv) A லிருந்து B க்கு சென்று மீண்டும் A புள்ளியை அடைந்தால் இடப்பெயர்ச்சி சுழியாகும்.

(1) i, ii, iii சரி (2) i, iii, iv சரி (3) i, iv மட்டும் சரி (4) அனைத்தும் சரி

LIVEWORKSHEETS

52. படத்தைப் பார்த்து சரியானதை தேர்வு செய்க.




a. A லிருந்து B க்கு குறைந்த தொலைவில் ஓர் சாலை அமைத்தால் அதன் நீளம் 2 ஆம் பாதையின் நீளத்திற்கு சமமாக இருக்கும்.

b. ஒருவர் பாதை 1 ன் வழியாக A லிருந்து B ஐ அடைந்து பின் பாதை 2 ன் வழியாக A ஐ அடைந்து பின் மீண்டும் பாதை 1 ன் வழியாக B ஐ அடைகிறார் எனில் அவரின் இடப்பெயர்ச்சி 5 கிமீ மற்றும் கடந்த தொலைவு 27 கிமீ ஆகும்.

c. ஒருவர் மிதிவண்டியில் மணிக்கு 5 கிமீ வேகத்தில் பாதை 1 ன் வழியாக சென்றால் அவர் A லிருந்து B ஐ அடைய 120 நிமிடங்கள் ஆகும்.

d. ஒருவர் A லிருந்து B க்கு பாதை 1 ன் வழியாக 5 நிமிடத்தில் சென்றால் அவரது வேகம் 2 கிமீ/ நி மற்றும் அவரது திசைவேகம் 1 கி.மீ / நி ஆகும்.

(1) a, b, c சரி (2) b, c, d சரி (3) a, b, d சரி (4) a, c, d சரி


53. வடக்கு மற்றும் கிழக்கிற்கு இடைப்பட்ட திசையை ______ என அழைக்கிறோம்.

(1) தெற்கு (2) தென்மேற்கு (3) வடகிழக்கு (4) மேற்கு

54. ஒரு பொருள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 7 மீ பயணம் செய்து பின் மீண்டும் வடக்கு நோக்கி 4 மீ பயணம் செய்தார். எனில் அவரது இடப்பெயர்ச்சி

(1) +7+4 = 11மீ (2) -7-4 = -11மீ (3) +7-4 = 3மீ (4) -7+4 = -3 மீ


55. படத்தைப் பார்த்து விடையளிக்க. வீட்டிலிருந்து மைதானத்தை அடைந்தவரின் இடப்பெயர்ச்சி ______மீ ஆகும்.




(1) 100 (2) 400 (3) 300 (4) 500

LIVEWORKSHEETS

56. படத்தைப் பார்த்து தவறானதைத் தேர்வு செய்க.




a. வீட்டிலிருந்து மைதானத்திற்கு ஒருமுறை சென்றுவர ஆகும் தொலைவு 800 மீ ஆகும்.

b. வீட்டிலிருந்து மைதானத்திற்கு சென்று பின் மீண்டும் வீட்டை அடைந்த பிறகு அவரது இடப்பெயர்ச்சி 0 மீ ஆகும்.

c. மைதானம் அமைந்துள்ள திசை வடகிழக்கு.

d. வீடு அமைந்துள்ள திசை வடமேற்கு.

(1) a, b, c சரி (2) b, c, d சரி (3) a, b, d தவறு (4) d மட்டும் தவறு.

57. நமது வாகனங்களில் ஓடோமீட்டர் காட்டுவது ______.

(1) வேகம் (2) இடப்பெயர்ச்சி (3) தொலைவு (4) முடுக்கம்

58. வேகம் மற்றும் திசையில் மாற்றமடைந்திருப்பதை உணர்த்தும் படம் எது?




(1)




(2)




(3)

(4) அனைத்தும்

59. வேகத்தின் அடிப்படையில் பொருந்தாததை தேர்வு செய்க.

(1) மண்புழு (2) குதிரை (3) சிறுத்தை (4) யானை

60. குறிப்பிட்ட கால இடைவெளியில் சீரான வேகத்தில் செல்லும் பொருளின் இயக்கத்தை ______ என்கிறோம்.

(1) நேர்கோட்டு இயக்கம் (2) வட்ட இயக்கம்

(3) சீரான இயக்கம் (4) சீரற்ற இயக்கம்

LIVEWORKSHEETS

61. ஒரு பேருந்து ஒவ்வொரு வினாடியும் மிகச்சரியாக 5.1 மீ தூரத்தை கடக்கிறது எனில் அது _______ இயக்கத்தில் உள்ளது.

(1) நேர்கோட்டு இயக்கம் (2) வட்ட இயக்கம்


(3) சீரான இயக்கம் (4) சீரற்ற இயக்கம்

62. ஒரு பேருந்து காலத்தைப் பொருத்து மாறுபட்ட வேகத்தில் திருச்சியிலிருந்து சராசரியாக 60 கிமீ வேகத்தில் 2 மணி நேரத்தில் ஆரூரை அடைகிறது எனில் அது _______ இயக்கத்தில் உள்ளது.

(1) நேர்கோட்டு இயக்கம் (2) வட்ட இயக்கம்

(3) சீரான இயக்கம் (4) சீரற்ற இயக்கம்

63. பின்வரும் படங்களில் எப்படம் பொருளின் சீரான இயக்கத்தை குறிக்கிறது?




(1) (2) (3) (4)

64. தொலைவு மாறுபடும் வீதம் _______ எனப்படும்.

(1) வேகம் (2) திசைவேகம் (3) சீரான வேகம் (4) சீரற்ற வேகம்

65. இடப்பெயர்ச்சி மாறுபடும் வீதம் _______ எனப்படும்.

(1) வேகம் (2) திசைவேகம் (3) சீரான வேகம் (4) சீரற்ற வேகம்

66. ஓரலகு காலத்தில் ஒரு பொருள் எவ்வளவு தொலைவு கடந்தது என்பதை அப்பொருளின் _______ என்கிறோம்.

(1) வேகம் (2) சராசரி வேகம் (3) சீரான இயக்கம் (4) சீரற்ற இயக்கம்

67. ஒரு பொருள் சமகால இடைவெளியில் சம தொலைவினைக் கடந்தால் அதனை _______ என்கிறோம்.

(1) வேகம் (2) சராசரி வேகம் (3) சீரான வேகம் (4) சீரற்ற வேகம்

68. இரு ஊர்களுக்கு இடையேயான பாதை, நேர்கோட்டுப் பாதையாக இருந்தால் அவற்றின் _______ , _______ சமமாக இருக்கும்.

(1) தொலைவு, வேகம் (2) தொலைவு, திசைவேகம்

(3) தொலைவு, இடப்பெயர்ச்சி (4) வேகம், இடப்பெயர்ச்சி

69. திசைவேகம் மாறுபடும் வீதம் _______ எனப்படும்.

LIVEWORKSHEETS

(1) வேகம் (2) சராசரி வேகம் (3) முடுக்கம் (4) சராசரி முடுக்கம்

70. கீழ்காண்பவற்றுள் எக்கூற்று சரியானது.

(1) தொலைவு மாறுபடும் வீதமே வேகம்.

(2) இடப்பெயர்ச்சி மாறுபடும் வீதமே திசைவேகம்.

(3) திசைவேகம் மாறுபடும் வீதமே முடுக்கம்.

(4) அனைத்தும் சரி.

LIVEWORKSHEETS